**சுருக்கம்**

தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை – செய்தி மக்கள் தொடர்புத் துறையின் செய்தி வெளியீட்டுப் பிரிவில் பருவ இதழ் செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டை வழங்குவதற்கான புதிய வழிகாட்டி விதிமுறைகள்– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை

அரசாணை (நிலை) எண். 425

நாள் 19.12.2012.
திருவள்ளுவராண்டு 2043,
மார்கழி 5 ஆம் நாள்
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.210, செய்தி மற்றும் சுற்றுலா(செய்தி வெளியீடு)த் துறை, நாள் 3.12.1996.
2. செய்தியாளர் அட்டை பரிந்துரைக்குழு கூட்டம் நடைபெற்ற நாள் 19.12.2011. (ம) 27.06.2012.

------

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் பருவ இதழ்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களில் பணியாற்றும் செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அடையாள அட்டை வழங்குவதற்கு வழிகாட்டி விதிமுறைகளும், செய்தியாளர் அட்டைக்கான விண்ணப்பங்களை பரிசீலித்து ஆலோசனை வழங்குவதற்கென பரிந்துரை குழுவும் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஏழு நபர்களை கொண்ட செய்தியாளர் அட்டை பரிந்துரைக் குழுவில் அரசு நியமித்த ஐந்து உறுப்பினர்களும், உறுப்பினர் செயலராக செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) அவர்களும் இடம்பெற்றிருந்தனர்.

3) அரசாணையில் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் 19.12.2011 அன்றைய செய்தியாளர் அட்டை பரிந்துரைக் குழுக் கூட்டத்திலும், 27.6.2012 அன்று தலைமைச் செயலகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை, இயக்குநர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற குழு ஆலோசனைக் கூட்டத்திலும், செய்தியாளர் அடையாள அட்டை வழங்க ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டிருந்த வழிகாட்டி விதிகளில் கீழ்க்கண்டவாறு புதிய வழிகாட்டி விதிகளை நிறைவேற்ற கேட்டுக் கொண்டனர்.

4) அதன்படி, செய்தியாளர் அடையாள அட்டை கோரும் செய்தி நிறுவனத்தின் இதழ்கள் அச்சடிப்பு எண்ணிக்கையை 10 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் ஆக உயர்த்துவதோடு, அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும்போது 6 மாத தொடர் வெளியீடுகள் சமர்ப்பித்த நிலையை மாற்றி ஒரு வருட தொடர் வெளியீடுகளை சமர்ப்பிக்கவும், பருவ இதழ்களில் வெளிவரும் செய்திகள் தமிழக அரசின் இறையாண்மையை பாதிக்காத வகையில் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், செய்தியாளர் அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது, ஒவ்வொரு ஆண்டும் தாங்கள் பணிபுரியும் பருவ இதழின் பத்திரிகை பதிவினை இந்திய பத்திரிகைகளின் பதிவாளர் அலுவலகத்திலிருந்து (Registrar of Newspapers of India) செல்லத்தக்கதாக பெற்றுள்ள சான்றின் நகலை இணைத்தல் வேண்டும் என்றும் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

5) அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர் செய்தியாளர் அட்டை பரிந்துரைக் குழுவின் கருத்தினை ஏற்று பின்வருமாறு வழிகாட்டி விதிகளை மாற்றி அமைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

1) செய்தியாளர் அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது, ஒவ்வொரு ஆண்டும் தாங்கள் பணிபுரியும் பருவ இதழின் பத்திரிகை பதிவினை இந்திய பத்திரிகைகளின் பதிவாளர் அலுவலகத்திலிருந்து (Registrar of Newspapers of India) செல்லத்தக்கதாக பெற்றுள்ள சான்றின் நகலை இணைத்தல் வேண்டும்.

2) பருவ இதழ்களின் விற்பனை பிரதிகள் எண்ணிக்கை குறைந்தபட்சம் 20,000 ஆக இருத்தல் வேண்டும்.

3) விண்ணப்பிக்கும்போது ஒரு வருட தொடர் வெளியீடுகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

4) பருவ இதழ்களில் வெளிவரும் செய்திகள் தமிழ்நாடு அரசின் இறையாண்மையை பாதிக்காத வகையில் இருத்தல் வேண்டும்.

5) பருவ இதழ்களில் நிரந்தர ஊழியராக இருத்தல் வேண்டும்.

6) செய்தியாளர்கள்/புகைப்படக்காரர்கள் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மூ.இராசாராம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
செயலாளர், தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை.
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
திரு.தங்க புகழேந்தி, இணை இயக்குநர் (நிர்வாகம்), சென்னை–9.
திரு.எஸ்.பி.எழிலழகன், இணை இயக்குநர்(செய்தி)/துணை இயக்குநர் (ம.தொ) (பொ) சென்னை–9.
திரு.எஸ்.தில்லை. செய்தி ஆசிரியர், ஜெயா டிவி.
திரு.S.N. செல்வம், தலைமை நிருபர், தேவி வார இதழ்.
தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தி(செய்தி வெளியீட்டுப் பிரிவு)த் துறை, சென்னை–9.

நகல்
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19.12.12
பிரிவு அலுவலர்